பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
17 03 2025 **MONDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – நியூஸிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இருதரப்பு உறவுகளில் ஒரு மைல் கல்லாக அமையும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

2. ஒரே நாடு - ஒரே தேர்தல் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ளது.

3. ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் ஹரியானா மாநிலங்களின் வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

4. ஏமன் நாட்டில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலை அடுத்து, இஸ்ரேல் தனது விமானப்படையை ஆயத்தப்படுத்தியுள்ளது.

5. உலக கோப்பை கபடி போட்டி இங்கிலாந்தில் இன்று தொடங்குகிறது.

>>>>>>><<<<<<

இந்தியா – நியூஸிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளதாக இருநாடுகளும் தெரிவித்துள்ளன.

மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், புதுதில்லியில் நேற்று நியூஸிலாந்து வர்த்தக அமைச்சர் திரு. **Todd Mc Clay-** யுடன் இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த பேச்சுவார்த்தை இருதரப்பு ஒத்துழைப்பில் ஒரு மைல் கல்லாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

வர்த்தக உறவுகளை மேலும் விரிவுபடுத்தி, பொருளாதார வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான தொலைநோக்கை பிரதிபலிப்பதாக இந்த பேச்சுவார்த்தை அமைந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா – நியூஸிலாந்து இடையேயான இருதரப்பு வர்த்தகம், கடந்த ஏப்ரல் மாதம் முதல் இந்த ஆண்டு ஜனவரி மாதம் வரையிலான காலகட்டத்தில் 100 கோடி டாலரை கடந்திருப்பதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

**>>>>>>><<<<<<**

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், அமெரிக்காவின் தேசிய புலனாய்வு அமைப்பு இயக்குநர் திருமதி. **Tulsi Gubbard**-ஐ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையின் போது, இந்தியா – அமெரிக்கா இடையிலான நட்புறவு குறித்து பல்வேறு அம்சங்கள் விவாதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் திரு. டொனால்டு ட்ரம்ப் தலைமையிலான அரசில், தேசிய புலனாய்வு அமைப்பு இயக்குநராக பொறுப்பேற்ற பிறகு திருமதி. **Tulsi Gubbard** தமது இரண்டாவது வெளிநாட்டு பயணமாக இந்தியா வந்துள்ளார்.

**>>>>>>><<<<<<**

ஒரே நாடு - ஒரே தேர்தல் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ளது.

பிஜேபி உறுப்பினர் திரு. பி. பி. சௌத்ரி தலைமையிலான இக்குழு, ஏற்கனவே சட்ட வல்லுநர்கள் மற்றும் முன்னாள் நீதிபதிகளிடம் கருத்துக்களை கேட்டறிந்த நிலையில், இன்று பல்வேறு தரப்பினர்களின் கருத்துக்களை கேட்டறியவுள்ளது.

**>>>>>>><<<<<<**

வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவில் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த ஏழைகள், பெண்கள், கணவனை இழந்தவர்கள் மற்றும் குழந்தைகளின் நலனுக்கென பல்வேறு பரிந்துரைகள் இடம்பெற்றுள்ளதாக இந்த மசோதா குறித்த நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் தலைவர் திரு. ஜெக்தாம்பிகா பால் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத்திருத்தம் தொடர்பாக இஸ்லாமிய அமைப்புகள் புதுதில்லியில் இன்று நடத்தவுள்ள போராட்டத்தை கைவிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுபோன்ற போராட்டங்கள் வெறுப்புணர்வை தூண்டவதாகவே அமையும் என்று திரு. ஜெக்தாம்பிகா பால் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<

ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் ஹரியானா மாநிலங்களின் வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

ஹரியானா மாநிலத்தின் பட்ஜெட்டை நிதித்துறைக்கு பொறுப்பு வகிக்கும் அம்மாநில முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனி சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யவுள்ளார்.

இதேபோன்று, ஹிமாச்சலப்பிரதேச அரசின் பட்ஜெட்டை அம்மாநில முதலமைச்சர் திரு. சுக்வீந்தர் சிங் சுகு சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<

மத்தியப்பிரதேசத்தில் உள்ள குனோ தேசிய பூங்காவில் இன்று மேலும் ஐந்து சிவிங்கி புலிகள் திறந்துவிடப்படவுள்ளன.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், தென்னாப்பிரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டு, காமினி என்று பெயரிடப்பட்டுள்ள பெண் சிவிங்கி புலியும், அதன் நான்கு குட்டிகளும் இன்று வனப்பகுதியில் திறந்துவிடப்படவிருப்பதாக கூறியுள்ளார்.

இந்தப் பூங்காவில் உள்ள கஜூரி சுற்றுலா மண்டலத்தில் இதுவொரு முக்கிய அம்சமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பிப்ரவரி மாதம் நான்கு சிவிங்கி புலிகள் இந்த பூங்காவில் சேர்க்கப்பட்ட நிலையில், இங்குள்ள மொத்த சிவிங்கி புலிகளின் எண்ணிக்கை 12ஆக உயர்ந்துள்ளது.

>>>>>>><<<<<<

ஏமன் நாட்டில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலை அடுத்து, இஸ்ரேல் தனது விமானப்படையை ஆயத்தப்படுத்தியுள்ளது

இஸ்ரேல் முழுவதும் ஏற்கனவே பாதுகாப்புப் படைகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக, இஸ்ரேலில் உள்ள அமெரிக்க அமைப்புகளுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா நடத்திய தாக்குதலில் 30க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததற்கு பதிலடி தாக்குதல் நடத்தப்போவதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அறிவித்ததை அடுத்து, இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

ஆயுர்வேத மருந்துப் பொருட்களின் ஏற்றுமதி, கடந்த பத்தாண்டுகளில் 2 புள்ளி எட்டு ஐந்து பில்லியன் டாலர் அளவிற்கு அதிகரித்துள்ளதாக மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் செயலாளர் திரு. ராஜேஷ் கொடேச்சா தெரிவித்துள்ளார்.

அஹமதாபாதில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்குப் பேசிய அவர், ஆயுர்வேதம் மருத்துவ முறை மட்டுமின்றி, வாழ்க்கைக்கான அறிவியல் என்று கூறினார்.

நமது உணவு முறையில் அன்றாடம் பயன்படுத்தும் வாசனை திரவிய பொருட்கள் ஆயுர்வேதத்தின் பொக்கிஷம் என்றும் திரு. ராஜேஷ் கொடேச்சா குறிப்பிட்டார்.

>>>>>>><<<<<<

கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை முறையின் ஒருங்கிணைந்த அங்கமாக விளையாட்டை சேர்க்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் ஃபிட் இந்தியா திருவிழாவை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதை ஆரோக்கியமான சமுதாயம் உறுதி செய்யும் என்று தெரிவித்தார்.

இந்த திருவிழாவில் மேற்கொள்ளப்படும் யோகா, ஏரோபிக்ஸ் மற்றும் ஜூம்பா உடற்பயிற்சிகள், ஆரோக்கியமான உடல்நலன் குறித்த ஆக்கபூர்வ தகவல்களை மக்களுக்கு வழங்குவதாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் பல்வேறு விளையாட்டுகளில் பங்கேற்பதுடன், சைக்கிள் பயிற்சியை தங்களது அன்றாட பழக்க வழக்கமாக மேற்கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த திருவிழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

**Trinidad Tobago** நாட்டின் புதிய பிரதமராக திரு. **Stuart Young** இன்று பதவியேற்கிறார்.

**St. Ann's** நகரில் உள்ள அதிபர் மாளிகையில் நடைபெறும் விழாவில், அந்நாட்டு அதிபர் புதிய பிரதமருக்கு பதவிப்பிரமாணம் செய்துவைக்கவுள்ளார்.

திரு. **Young** தற்போது அந்நாட்டின் எரிசக்தி மற்றும் தொழில்துறை அமைச்சராக பதவி வகித்து வருகிறார்.

>>>>>>><<<<<<

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நடந்த தாக்குதலில் ராணுவ வீரர்கள் 12 பேர் உயிரிழந்தனர். 26 பேர் காயமடைந்தனர்.

ராணுவ வீரர்கள் பயணம் செய்த பேருந்து, **Noshki** பகுதியில் சென்று கொண்டிருந்த போது, பலுசிஸ்தான் விடுதலைப் படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் இவர்கள் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களது தாக்குதலில் இதுவரை பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் 90 பேர் உயிரிழந்திருப்பதாக பலுசிஸ்தான் விடுதலைப்படை தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<

உத்தரபிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு சீராக பராமரிக்கப்பட்டு வருவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

அம்மாநிலத்தில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான அரசு, எட்டு ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளதை அடுத்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்ற செயல்களை ஒழிப்பதற்காக கடந்த எட்டு ஆண்டுகளில் மேற்கொண்ட நடவடிக்கைகள், புள்ளி விவரங்களுடன் அதில் இடம்பெற்றுள்ளன.

>>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவது என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை, உலக அரங்கில் இந்தியாவிற்கு முக்கிய இடத்தை பெற்றுத்தரும் என்று ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி கூறியுள்ளார்.

புதுதில்லியில் பிபின்ராவத் நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், சீனா, அந்நாட்டின் ராணுவ நிலைகளை வலுப்படுத்தி வருவது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது என்றார்.

>>>>>>><<<<<<

உலக கோப்பை கபடி போட்டி இங்கிலாந்தில் இன்று தொடங்குகிறது.

ஏழு நாட்கள் நடைபெறும் இப்போட்டியின் **B** பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி, தனது முதலாவது ஆட்டத்தில் இன்று இத்தாலியை எதிர்கொள்கிறது.

மகளிர் பிரிவில் இந்திய அணி, வேல்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>><<<<<<

ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் மனிஷா ராம்தாஸ் 8-21, 21-17, 21-12 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் **Maud Lefort**-ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Naveen Sivakumar** 21-14, 14-21, 21-14 என்ற செட்கணக்கில் **Sukant Kadam**-ஐ வென்றார்.

>>>>>>><<<<<<

சேலஞ்ச் கோப்பை ஸ்குவாஷ் போட்டி இன்று ஹாங்காங்கில் தொடங்குகிறது.

வரும் 21ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவின் **Ravi Dixit** பங்கேற்கவுள்ளார்.

>>>>>>><<<<<<

மாஸ்டர்ஸ் லீக் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி பட்டம் வென்றது.

ராய்ப்பூரில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்திய அணிக்கு எதிராக டாஸ் வென்று முதலில் பேட் செய்த வெஸ்ட் இண்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 148 ரன் எடுத்தது.

149 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி 17 புள்ளி ஒரு ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 149 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

>>>>>>><<<<<<

தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம கிராமிய பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையிலான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டியில் வாலிபால் பிரிவில் சென்னை ஹிந்துஸ்தான் கல்லூரி அணியும், கால்பந்துப் போட்டியில் காந்திகிராம பல்கலைக் கழக அணியும் வெற்றிபெற்றன.

கபடி போட்டியில் மதுரை எஸ்விஎன் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

>>>>>>><<<<<<